# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2055 ●நவம்பர் 23, 2024 Weekly E-paper ● November 23, 2024




# இது ஓர் அறிவியக்கம்!

சுப.வீரபாண்டியன்

## அரசாங்கமும் மதச்சார்பின்மையும்!

## கருத்துரிமைக்குக் குரல் கொடுப்போம்!

தலையங்கம்

## திராவிடப் போராளிகள்

நூல் அறிமுகம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2055 ●நவம்பர் 23, 2024 Weekly E-paper ● November 23, 2024


# இது ஓர் அறிவியக்கம்!

**சுப.வீரபாண்டியன்**



ஒரு நூற்றாண்டைக் கடந்து நிற்கும் திராவிட இயக்கம், தன் வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்த வேண்டாமா? வேண்டும், கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

அந்தப் பணியை மிகச் சரியாக, மிகப்பெரிய அளவில், மிகுந்த தொழில் நுட்ப நேர்த்தியுடன் நடத்தி இருக்கிறது, திமுக மகளிர் அணி! திமுகவின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களின் வழிகாட்டுதலில், மகளிர் அணி அதனை ஒரு பெரும் பணியாக எடுத்து நடத்தி முடித்திருக்கிறது!

ஒரு வரலாற்று நிகழ்வு இன்று அறிவாலயத்தில் நடந்தேறி இருக்கிறது திரும்பத் திரும்ப ஏன் பழைய வரலாற்றையே பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சிலர் கேட்கிறார்கள். எங்களுக்கு வரலாறு இருக்கிறது - அதனால் பேசுகிறோம்! வரலாற்றை அறிந்தவர்கள்தான் வரலாற்றைப் படைக்க முடியும் - அதனால் பேசுகிறோம்!

போட்டி நடத்துவதும், வரலாற்றைச் சொல்வதும் பெரிய செயல்கள்தான். ஆனால் அவற்றினும் பெரிது, இந்தப் போட்டிகளில் பங்கேற்ற இரண்டு லட்சம் பேர்களிடம், திராவிட இயக்க வரலாற்றைக் கொண்டு போய்ச் சேர்த்திருப்பது!

கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி போன்ற வடிவங்களைத் தாண்டி, வினாடி வினா என்னும் வடிவத்தில், மகளிர் அணி இந்தச் சாதனையை செய்து முடித்திருக்கிறது!

இந் நிகழ்விற்கான வினாக்களைத் தயார் செய்ய 15 பேர் கொண்ட குழுவை அமைத்து, 2000 பக்கங்களில் செய்திகளை வடிவமைத்து, தமிழ்நாடு முழுவதும் போட்டிகளை நடத்தி, இறுதியாகச் சென்னை அறிவாலயத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முன்னிலையில் இறுதி நிகழ்வு நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்!

சென்னையில் இறுதிப் போட்டியை நடத்திய எழுத்தாளர் கோவி. லெனின், இனி வினாடி வினா நடத்துவதற்கு இவர்தான் என்பது போல ஒரு முத்திரையைப் பதித்திருக்கிறார்.

இறுதியாக வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி, பரிசளிக்க வந்த கழகத்தின் தலைவர், முதலமைச்சர் தன் பங்கிற்கு அவரும் பார்வையாளர்களைப் பார்த்து கேள்விகளை முன் வைத்தார். இதுவரையில் லெனின் கேள்வி கேட்டார், இப்போது ஸ்டாலின் கேள்வி கேட்கப் போகிறேன் என்றுசொல்லி அரங்கத்தை கலகலப்பாக்கினார்.

அறுவை சிகிச்சைக்கு முன்னால் எனக்கு ஒரு நாள் நேரம் கொடுங்கள். ஒரு புத்தகத்தைப் படித்து விட்டு வந்து விடுகிறேன் என்று அறிஞர் அண்ணா மருத்துவரிடம் சொன்னாரே, அவர் படித்துக் கொண்டிருந்த அந்தப் புத்தகம் எது என்று கேட்டார். மேரி கொரில்லி எழுதிய Master Christian என்ற அந்தப் பெயர் முயற்சி செய்தும் என் நினைவுக்கு அந்த நொடி வரவில்லை. கூட்டத்திலிருந்த ஒருவர் சரியாக விடை சொல்லி முதல்வரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.

திராவிட இயக்கம், அரசியல் கட்சி மட்டும் இல்லை, அது ஓர் அறிவியக்கம் என்பதை அந்தப் பேரரங்கம் மறுபடியும் ஒருமுறை உறுதிப்படுத்தியது !

மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதியின் வழிகாட்டலில், தமிழ்நாடு முழுவதும் திமுக இளைஞரணி நடத்திய பேச்சுப் போட்டிகளில் 17000 இளைஞர்கள் பங்கேற்றார்கள். அதன் மூலம், புதிதாக 182 இளம் பேச்சாளர்கள் இப்போது கழகத்திற்குக் கிடைத்திருக்கிறார்கள்.

கலைஞர் 100 - இல்லை - கலைஞர் 1000 இந்தத் தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் சொன்னது உண்மையாகட்டும்!

●

# அரசாங்கமும் மதச்சார்பின்மையும்..!

இந்தியக் குடியாட்சியின் உதவித் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு சிற்றூரில் உள்ள பள்ளி வாசலைத் திறந்து வைத்தது பற்றியும், அக்கூட்டத்தில் முஸ்லீம்களைப் பற்றிப் பேசுகையில் இந்தியாவை முன்பு ஆண்ட பரம்பரையினர் என்று வெகுவாகப் புகழ்ந்து பேசியது குறித்து 'இந்து' தினசரியில் கடந்த 10.05.65 அன்று சென்னையிலிருந்து திரு. சங்கர் என். மைத்திரா என்பவர் கண்டனம் தெரிவித்து 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் எழுதியுள்ளார்.

மதச்சார்பற்ற முறையில் நடைபெறும் அரசாங்கம் என்று கூறிக்கொள்ளப்படும் அரசாங்கத்தின் உதவித் தலைவர் இப்படிக் கலந்து கொள்வது அதன் மதச்சார்பற்ற தன்மைக்கும், பெருமைக்கும் களங்கம் என்று அவர் துணிந்து அதில் தெரிவித்திருந்தார்.

உண்மையைச் சொன்னால் யாருக்கும் உடம்பெரிச்சல்தானே வரும்? அக்கடிதத்தைக் கண்டு வெகுண்டு திருச்சியில் இருந்து ஒரு முஸ்லீம் அன்பர் அதே தினசரியில் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் பதிலளிப்பது போன்று உபஜனாதிபதியின் செய்கைக்கு சப்பைக்கட்டு கட்டி எழுதியிருக்கிறார். மத உணர்ச்சி காரணமாக ஒரு முஸ்லீமுக்கு மற்றொரு முஸ்லீம் வக்காலத்து வாங்குவது ஒன்றும் அதிசயம் இல்லை என்றாலும், அப்பதிலில் அவர் கூறியுள்ள சில தகவல்கள், உபஜனாதிபதி கலந்து கொண்டதற்கு ஆதரவாக அவர் தேடியுள்ள சாட்சியங்கள். மொத்தத்தில் இன்றைய ஆட்சிக்கு மதச்சார்பற்ற ஆட்சி என்பது அய்வருக்கும் தேவியாம் அழியாத பத்தினியாம் என்று திரௌபதியின் கற்பின் பெருமையை விளக்குவது போன்ற செயலேயாகும்.

மதச்சார்பற்ற அரசாங்கம் என்றால் மதமே அற்ற அரசு என்று தவறாக சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படி இல்லை. எல்லா மதத்தினருக்கும் சம வாய்ப்புத் தந்து போற்றும் அரசேயாகும் என்ற கோணல் வாதத்தைக் கூறி தப்பித்துக் கொள்ளவே ஜனாதிபதி பார்ப்பனரிலிருந்து சாதாரண புரோகிதப் பார்ப்பனர் வரை கூறுகின்றனர்.

ஆக்ஸ்ஃபோர்டு அகராதியில் (பக்கம் 1124-இல்) 'செக்யுலர்' என்பதற்கு அர்த்தமே, இவ்வுலகம் சம்பந்தமான, உலகியல் புனிதம் என்று எதையும் கருதா, மடங்கள் சம்பந்தமற்ற (not monastic) என்றுதான் உள்ளதே ஒழிய, எல்லா மதங்களுக்கும் ஒத்த உரிமை தரும்' என்ற பொருளைக் கூறவே கிடையாது.

என்றாலும் ஆட்சியின் உச்சத்தில் அக்கிரகாரப் பூணூல்கள் இருப்பதால் தங்கள் இஷ்டம் போல் மோட்சம், நரகம் வியாக்கியானம் போல, இதற்கும் தங்களுக்கேற்ற விளக்கத்தைத் தருகின்றனர்.

திருச்சி முஸ்லீம் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில் காலஞ்சென்ற ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களே முன்னின்று, சோமநாதபுரம் கோயிலை புனிதப் புனருத்தாரணம் செய்யவில்லையா? அதைக்கூட டாக்டர் முன்ஷி போன்றவர்கள் பாராட்டவில்லையா? அது தவிரவும், பல கோயில்களில் கும்பாபிஷேகம் (மதுரை மீனாட்சியம்மன் கோயில் போன்று) நடைபெறுவதில் ராஜ்ய கவர்னர், பெருந்தலைகள், மந்திரிகள் இவர்கள் எல்லாம் கலந்து கொள்ளவில்லையா? இதன்மூலம் மதச்சார்பற்ற தன்மைக்கு இழுக்கு ஏற்படவில்லையே? என்றெல்லாம் இன்றைய இந்துமத பார்ப்பன அடிமைகளின் போக்கை சாக்காகக் காட்டி அதில் மறைந்து கொள்ள முயற்சித்துள்ளார்.......

ஒட்டு மொத்தத்தில் மதச்சார்பற்ற அரசாங்கம் என்பது பேச்சளவில்தான் எழுத்தளவில் எங்கும் கிடையாது. அரசியல் சட்டத்தில் Secular என்ற வார்த்தையே எங்கும் கிடையாது என்பது பலருக்குத் தெரியாது*. அரசியல் சட்டம் எழுதிய பார்ப்பனர்கள் அப்போதே அதில் சர்வ ஜாக்கிரதையோடு இருந்தனர் என்பது இதன்மூலம் தெரியுமே.

ஆனால் நடைமுறையில் மதப் பிரசார இலாகாவாக அரசாங்க இயந்திரம் நுனி முதல் அடி வரை மாறி வருவது மிகவும் வெட்கக்கேடான ஒன்றாகும்.

**(விடுதலை தலையங்கம் 18.05.1965)**

* Secular என்ற வார்த்தை அரசியல் சட்டத்தின் முகவுரையில் 1972ஆண்டு சேர்க்கப்பட்டது.

## சீமானின் உருட்டுகள்






*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## கருத்துரிமைக்குக் குரல் கொடுப்போம்!

புதிய குரல் அமைப்பின் நிறுவனர் எழுத்தாளர் ஓவியா சில ஆண்டுகளுக்கு முன்னர் பேசிய காணொலியின் ஒரு பகுதியைச் சமுக வலைதளங்களில் பரப்பி அவருக்கு எதிரான அவதூறைச் செய்து கொண்டு இருக்கிறது பார்ப்பனக் கூட்டம்.

அப்படி என்ன பேசினார் தோழர் ஓவியா?

தேவேந்திர குல வேளாளர் என்ற பெயர் மாற்றத்தைச் சுட்டிக் காட்டிப் பேசும்போது, அவ்வாறு மாற்றி விட்டால் நமது இழிநிலை மாறி விடுமா? பார்ப்பனர்களின் தாசி மகன்கள் என்று இழிவுபடுத்தி எழுதி வைத்துள்ள சாத்திரங்கள், புராணங்கள் மாறி விடுமா? என்ற கேள்வியை அரங்கில் இருந்த பார்வையாளர்களின் முன்பாக வைக்கிறார் தோழர் ஓவியா. இதனைச் சுட்டிக் காட்டி, தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினை ஓவியா இழிவுபடுத்திப் பேசி விட்டார் என்ற அவதூறை சுமந்த் ராமன், நாராயணன் திருப்பதி ஆகியோர் தங்களது சமூக வலைதளப்பக்கங்களில் தொடங்கினர். தமிழக மக்கள் முன்னேற்றத் தலைவர் ஜான் பாண்டியன் தோழர் ஓவியாவைக் கைது செய்ய வேண்டும் என்று அறிக்கை விடுத்துள்ளார்.

எப்போதும் உழைக்கும் மக்களின் பக்கம் நின்று பேசும் திராவிட இயக்கம், அம்மக்களை இழிவுபடுத்துமா? வெறும் பெயர் மாற்றம் என்பது உங்களைச் சாதி இழிவிலிருந்து மீட்டு விடாது என்பதைத்தானே தந்தை பெரியார் அந்தந்த சாதிச் சங்க மாநாடுகளிலேயே சென்று பேசினார். அந்தக் கருத்தைத்தான் தோழர் ஓவியாவும் பேசியுள்ளார். உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் பார்ப்பனியம் குறித்த பரப்புரையைச் செய்து உண்மை நிலையை அவர்களுக்கு உணர்த்த வேண்டியவர்கள் இவ்வாறு அவதூறு செய்யலாமா?

ஆனால் இதை ஒரு சமூகத்திற்கு எதிராகத் திட்டமிட்டுத் திரிப்பது எவ்வளவு அறிவு நாணயமற்ற செயல். பார்ப்பனியம் நேரடியாக இயங்காமல் பல நேரங்களில் தனது ஏவலாட்களின் மூலம் இயங்கும் என்பதற்கு இதைவிட வேறு சாட்சியம் வேண்டுமா?

தமிழினத்தைத் தலைநிமிர வைக்கும் தந்தை பெரியாரின் கருத்துகளைத் தமிழரிடம் கொண்டு சேர்ப்பதும், பெரியாரின் கருத்துகளைக் கொண்டு சேர்க்கும் தோழர்களுக்கு அரணாக நின்று அவர்களது கருத்துரிமைக்குக் குரல் கொடுப்பதும் பெரியாரிய இயக்கங்களின் இன்றைய தலையாய கடமை.

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

**26.11.24** – மாலை – ஈரோடு – சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா

**28.11.24** – காலை – முசிறி – சுயமரியாதைத் திருமணம்

**29.11.24** – மாலை – சென்னை, பரங்கிமலை – திமுக பொதுக்கூட்டம்

**30.11.24** – மாலை – சென்னை, சத்தியமூர்த்தி பவன் தூரிகைப் பதிப்பகம் தொடக்க விழாவும், நூல்கள் வெளியீட்டு விழாவும்

**01.12.24** – மாலை – காட்பாடி – திமுக பொதுக்கூட்டம்




ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# திராவிடப் போராளிகள்

**திருப்பூர் மகிழவன்**

நூல் அறிமுகம்

தனித்தமிழ் இயக்கம் மற்றும் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய காலம் தொட்டு திராவிட இயக்கத்தைச் செழுமைப்படுத்தியதில், போராட்டங்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெண்களின் தியாக வரலாற்றை உலகுக்கு எடுத்துக் கூறும் நோக்கில் திராவிடர் கழகம் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள்

முத்தமிறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையாகிய முரசொலியில்,

நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கம் கடந்து வந்த வலி நிறைந்த பாதையைத் திராவிட இயக்க வரலாற்றை அடுத்தத் தலைமுறை இளைஞர்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கில்,மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் தி.மு.க. கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் முன்னெடுப்பில் உருவாக்கப்பட்ட பாசறைப் பக்கத்தில்

எழுதிய தொடர் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியிடாக வந்திருக்ககூடிய நூல் திராவிடப் போராளிகள்.

சங்க இலக்கியக் காலம் தொடங்கிப் பெண்களுடைய பங்களிப்பும் முக்கியத்துவம் பெரிதும் பேசப்படாத ஒன்றாகவே இருந்திருக்கிறது.

“பெண்கள் வருவதன் மூலமும் அவர்கள் வளர்ச்சி பெருகுவதன் மூலமும்தான் நமது கொள்கைகள் வீறிட்டெழ முடியுமே தவிர, “ஆண்களின் வீர உரைகளால் மாத்திரம்” காரியங்கள் சாத்தியமாகி விடாது” என்று 1931 ஆம் ஆண்டு ஈரோடு சுயமரியாதை மாநாட்டுக்கு பெரியார் அழைப்பு விடுத்தார்.




திராவிட இயக்கம் இந்த மண்ணில் வேரூன்றியதற்குப் பின்னால் தான். பெண்களுக்குச் சம வாய்ப்பு சம உரிமையும் கிடைத்திட வேண்டும் என்ற முழக்கம் வலிமை பெற தொடங்கியது.

பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதைக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்புப் போராட்டம், மாநாடுகள், கைது, சிறைவாசம் கண்ட பெண் போராளிகளுடைய வாழ்க்கை நமக்கு வியப்பை தரக்கூடியது.பேசப்பட வேண்டிய அந்த பெண் போராளிகளின் வரலாற்றை ஆழமான தரவுகளுடன் விரிவாகப் பேசும் நூல் திராவிடப் போராளிகள்.

தனித்தமிழ் இயக்கத்தையும் நீதி கட்சியையும் உருவாக்கிய அதில் ஈடுபட்ட தலைவர்கள் என மறைமலை அடிகள், டாக்டர் நடேசன், தியாகராயர், டி.எம். நாயர் உள்ளிட்ட ஆண்களின் வரலாற்றைப் படித்திருக்கிறோம்.

தனித்தமிழ் இயக்கத்தின் தாயாக நீலாம்பிகை அம்மையார் இருந்தார், நீதிக்கட்சியின் தோற்றத்திற்காகக் கூடிய முதல் கூட்டத்தில் அலர்மேலு மங்கை தாயாரம்மாள் என்ற ஒரு பெண் ஆளுமை இருந்தார்.

தந்தை பெரியார் காங்கிரஸ் இயக்கத்தில் செயல்பட்டு வந்தபோதே மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் காங்கிரஸ் இயக்கச் செயலாளராகத் தேவதாசி முறையை ஒழிப்பதற்காகப் போராடி வந்தார்.

பின்னாளில் 1938ஆம் ஆண்டுத் திருச்சியில் இருந்து அஞ்சான், பட்டுக்கோட்டை அழகிரி ஆகியோர் தலைமையில் தமிழர் பெரும்படை தலைநகரம் சென்னையை நோக்கி வழிநெடுக இந்தியை எதிர்த்துப் போர் பரணி கொட்டி பிரச்சாரம் செய்து வந்த 100 பேரைக் கொண்ட அந்த தமிழர் பெரும்படையில் பங்கேற்ற மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் என்றால் அது சாதாரணமா. அவருக்கு அப்போது வயது 60 .

காந்தியார் அறிவித்த மதுவிலக்குப் போராட்டத்தில் தந்தை பெரியாரின் துணைவியார் ஈ.வே.ரா நாகம்மை அவர்களும் பெரியாரின் தங்கை எஸ்.ஆர் கண்ணம்மாள் அவர்களும் தடையாணையை மீறி களத்தில் இறங்கி போராடி ஒரு மாதம் சிறை தண்டனை பெற்றார்கள்.மதுவிலக்குப் போராட்டத்தைக் கைவிடுவதா? அல்லது தொடர்வதா ? என்பது நம் கையில் இல்லை ஈரோட்டில் இருக்கும் இரு பெண்களின் கைகளில் தான் இருக்கிறது என்று பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் காந்தியார் குறிப்பிடும் அளவுக்குக் கடும் பணியாற்றினர்.

பெரியார் அறிவித்த இந்திய எதிர்ப்புப் போராட்டத்திலும்,சட்ட எரிப்பு போராட்டத்திலும் சற்றும் அஞ்சாது நிறைமாத கர்ப்பிணிகளாக, கைக் குழந்தைகளுடன் குடும்பத்தோடு சிறை சென்று சிறையிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்த பெண்களின் பங்களிப்பைப் பற்றி எல்லாம் அதிகம் பேசப்படவே இல்லை .

சங்க இலக்கியத்தில் 44 பெண்கள் எழுதிய பாடல்கள் கண்டறியப்பட்டுள்ளன. அழிக்கப்பட்டவை எத்தனையோ கிடைக்காதவை எத்தனையோ என்று நாம் அறிய முடியாது. சங்க இலக்கியக் காலத்திற்குப் பின்னால் ஒரு தொகுப்பாகப் பெண்களின் தியாகத்தையும் பங்களிப்பையும் பற்றிப் பேசும் வாய்ப்பு திராவிட இயக்கத்தில்தான் அமைந்துள்ளது.

அத்தகைய வரலாற்றையெல்லாம் தேடி கண்டுபிடித்து வெளிவுலகத்திற்குப் பறைசாற்றும் வகையில் அமைந்திருக்கக் கூடிய அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் திராவிடப் போராளிகள்.

**நூல்: திராவிடப் போராளிகள் 1&2**

**நூல் ஆசிரியர்: வழக்கறிஞர் அருள்மொழி**

**வெளியீடு : முத்தமிழறிஞர் பதிப்பகம்**

**தொடர்பு எண் : 9003324473**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian